# குருசேத்திரம்

කුරුසේත්තිරම්

Guruseththiram

## களம்:மூன்று கணை: பத்தொன்பது செப்டெம்பர் - 2022



**சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்தே...**

# குருசேத்திரம்

சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...


**பிரதம ஆசிரியர்**
திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்

**இணை ஆசிரியர்**
திரு. ஞா.இரத்தினசிங்கம்
திரு. ம.நிரேஸ்குமார்
திரு. ஞா.கயூரன்

**தொழிநுட்பமும் பசுமை எண்ணக்கருவும்**
திரு. நா.அம்பிகைபாகன்
திரு. த.குவேந்திரன்

**தொழிநுட்பமும் ஆக்க வடிவமைப்பும்**
திரு. வே.நந்தகுமார்
திரு. பொ.விஜயகுமாரன்

**நூலறிதலும் மேம்பாடும்**
கலாநிதி. நா.சந்திரிக்கா
திருமதி. ப.ஜெயச்சந்திரன்

**கதைக்களம்**
செல்வி. வி.கந்தசாமி
திரு. ம.நிரேஸ்குமார்

**காண்பியப் பொறுப்பு**
திரு. கே.ஆர்.கமலநாதன்

**வெளியீடு**
குருசேத்திரம் வெளியீடு
யாழ்ப்பாணம்.

**தொடர்புகளுக்கு**
gurusetththiram@gmail.com


# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ☞ ஆசிரியரின் உள்ளத்திலிருந்து | 01 |
| ☞ காட்சியும் கருத்தும் | 02 |
| ☞ அறிவு - தேடல் - அனுபவமாக்கல் : சிறுவர் கல்விக்கான அணுகுமுறை | 03 |
| ☞ கோழைத் தனத்தின் உச்சக்கட்டம்...! | 05 |
| ☞ எங்கள் மலையகம் (சிறுவர் பாடல்) | 06 |
| ☞ ட்ரைவர் மங்களவின் நெறியும் கொழும்பு மாளிகையின் வெறியும் | 07 |
| ☞ “இன்பா”வின் சிந்தனைத் தொடர்கள் -- 10 கதைகளால் நிஜமாகி... | 09 |
| ☞ ஆசிரியர்கள் மூன்று வகையினர் | 11 |
| ☞ படித்ததில் பிடித்தது | 12 |
| ☞ உலகத்தின் தூக்கம் கலையாதோ | 13 |
| ☞ தமிழ் மொழி | 13 |
| ☞ தோழியே | 14 |
| ☞ அழகான வரமாக இருங்கள்! | 15 |
| ☞ சீனாவின் சிவன் - சக்தி | 17 |
| ☞ பேசும் படங்கள்...! | 18 |



☞ குருசேத்திரத்தில் இடம் பெறுகின்ற கட்டுரைகள், ஆக்கங்களில் கூறப் பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் தகவல்களுக்கு அதனை எழுதியவர்களே பொறுப்புக் கூறக் கடப்பாடுடையவர்கள்!

# குருசேத்திரம்
## சமூகத்திற்கான மாற்றம் என்னிலிருந்து...

# ஆசிரியர் உள்ளத்திலிருந்து...




குருசேத்திரம் கணை 19 சஞ்சிகைக்கு ஆசிரியர் தலையங்கம் எழுதுவதில் மகிழ்சியடைகின்றேன். குருசேத்திரம் குழுமமானது தனது இலக்கு நோக்கிய பயணத்தில் சில அடையாளங்களை மக்களிடத்தில் இட்டு வருகின்றது என்பதில் குழுமத்தின் தலைவர் என்ற வகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

குருசேத்திர குழுமத்தின் முயற்சியால் வாழ்வியல் விடயங்கள் தொடர்பாகவும், மாணவர்களின் உயர்கல்வி வழிகாட்டல் தொடர்பாகவும் பல அறிவுப் பகிர்வு கருத்தாடல்கள் நடைபெற்று வருகின்றது.

எமது மாணவ ஆசிரியர்களின் செயற்பாட்டின் மூலம் பசுமை எண்ணக்கருவை செயலாக்கம் செய்வதில் வெற்றியை அடைந்து வருகின்றோம். அந்த வகையில் Green Layer மர நடுகை அமைப்பினால் எமது கல்லூரிக்கு “பசுமைப் புரவலர்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும், தற்போதைய எமது நாட்டின் பொருளாதார சூழல் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிலும் தாக்கம் செலுத்தி வருகின்றது. இக்காலத்தில் சுவிஸ் நாட்டில் வசிக்கும் திரு.சு.சிவநாமன் அவர்களால் 15 மாணவ ஆசிரியர்களுக்கு ஆற்றல் மேம்பாட்டு உதவி வழங்கி முன்னுதாரணமாக செயற்பட்டமை மகிழ்ச்சிக்குரியது.

தடைகளையும், எதிர்ப்புகளையும், துணிவுடன் எதிர் கொண்டு முன்னேறும் போது, வெற்றிகள் மலராவும், மாலையாகவும், மகுடமாகவும் வந்து சேரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே ஒவ்வொரு சிறிய முயற்சி களையும் சிறப்பாகச் செய்யும் போது அவை வெற்றிகளாகின்றன.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கும் வரை...

**சு.பரமானந்தம்**
**பிரதம ஆசிரியர்**

# காட்சியும் கருத்தும்

திரு. சு. பரமானந்தம்







**"குருசேத்திரம்"** மாதாந்த சஞ்சிகைக்கான ஆக்கங்கள் மாணவ ஆசிரியர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. தங்களின் ஆக்கங்கள் ஒரு பக்கத்திற்குள் உள்ளடங்குவது விரும்பத்தக்கது. குருசேத்திரம் உங்களின் களம்...

அனைவரும் ஆக்கங்களை எமது மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

✉ guruseththiram@gmail.com

# அறிவு - தேடல் - அனுபவமாக்கல்: சிறுவர் கல்விக்கான அணுகுமுறை

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

5



## 9. சிந்தனை – விளையாட்டு

எல்லாப் பிள்ளைகளும் ஒரேமாதிரியான சிந்தனையை, விருப்பங்களைக் கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள். வீட்டில் எவ்வளவு விளையாட்டுப் பொருட்கள் இருந்தாலும் சிலர் வெளியில் சென்று விளையாடுவதையே விரும்புவார்கள். பிள்ளைகளின் விளையாட்டிற்கு பெற்றோர்கள் உதவ வேண்டும். சமகாலத்தில் உடல் ரீதியான விளையாட்டுக்களை விட உள ரீதியான விளையாட்டுக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதாவது ஒரே இடத்தில் இருந்து விளையாடும் கணினி விளையாட்டுக்கள் அதிகம் காணப்படுகின்றது. தொடர்ந்து கணினியில் விளையாடுதல் பிள்ளைகளுக்கு வேண்டத் தகாத விளைவுகளை ஏற்படுத்தும். எனவே இது தொடர்பில் பெற்றோரின் கண்காணிப்பும் நெறிப் படுத்தலும் அவசியம். அதேவேளை உடற் தொழிற்பாடுடைய விளையாட்டுக்களுக்கும், பாரம்பரிய விளையாட்டுக்களான தாயம், பாண்டி, எட்டுக்கோடு, அப் ஆ – டவுன் ஆ போன்றவற்றிற்கும், கரம், சதுரங்கம் போன்ற விளையாட்டுக் களுக்கும் சந்தர்ப்பங்களை எற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

## 10. சிந்தனை – கலையுணர்வு

வாழ்வியல் சிந்தனைகளின் திறவுகோலாக அமைவது கலையுணர்வு. கலையுணர்வள்ளவர்களினாலேயே சிந்தனை களின் பல் பரிமாண கோலங்களை உருவாக்க முடிகின்றது. எனவே பிள்ளைகளுக்கும் கலையுணர்வை ஏற்படுத்தக் கூடிய செய்றபாடுகளை முன்னிலைப் படுத்த வேண்டும். அதாவது படங்கள், ஓவியங்கள் வரைதல், பாடல், ஆடல், கதை, கவிதை, எழுததல், வாசித்தல், இசைக்கருவிகளை உருவாக்குதல், கீழைத்தேய,மேலைத்தேய இசைக்கருவிகளை செயல்படுத்த பழகுதல் போன்ற செயற்பாடுகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ மாணவர் இயலுமைக்கெற்ப பயிற்சிப்படுத்திக்கொள்ள சந்தர்ப்பங்களை பெற்றோரும், ஆசிரியரும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

## 11. சிந்தனை – வாசிப்பு

பிள்ளைகளின் வாசிப்புத் திறனை விருத்தி செய்வதன் மூலம் சிந்தனை விருத்தியை ஏற்படுத்தலாம். சமகாலத்தில் பல்லுணர்வுப் புலக்காட்சிகள் வலுப்பெற்றுவருவதால் வாசிப்பின் தேவையும் ஆர்வமும் குறைந்துவருகின்றது. அத்துடன் எழுத்துப் பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட

மதிப்பீட்டு முறை, மாணவர்கள் இலகுவாக மனனம் செய்யும் பொருட்டு தனியார் கல்வி நிலையங்களிலும் பாடசாலைக ளிலும், பல்கலைக் கழகங்களிலும் குறிப்பு (Notes) வழங்கும் நடைமுறை காணப்பட்டு வருதலும் வாசிப்பின் முக்கியத் துவத்தை குறைத்து வருகின்றது. எனினும் தற்போது சுயகற்றல் முறை, சுயமாக அனுபவம் பெறல் போன்ற செயற்பாடுகள் கட்டுருவாக்கவாத செயன்முறை மூலம் ஊக்குவிக்கப்படுவதால் வாசிப்பின் முக்கியத்தவம் உணரப் பட்டுள்ளது. எனவே பிள்ளைகள் வாசிப்பதற்கான சந்தர்ப்பம் பாடசாலைகளிலும், வீட்டிலும் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுவர் கதைகள் போன்றவற்றை பிள்ளைகளின் பார்வையில் படும்படி வைப்பதன் மூலமும் அவை பற்றி அவர்களுடன் கதைப்பதன் மூலமும் வாசிப்பில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம்.

## முடிவுரை:

சிறுவர்களின் கற்பனா சக்தி எந்தத் திசையில் வளருமென்று ஆசிரியர்களாலும், பெற்றோராலும் சரி வரக் கூற முடியாது விட்டாலும் அவர்களின் சிந்தனை விருத்திக்கான, மாற்றத் திற்கான செயற்பாடுகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆக்க பூர்வமாகச் சிந்திப்பது ஒரு கட்டம் மட்டமே. ஆசிரியர்களும் பெற்றாரும் எவ்வளவுதான் சிறுவர்களை வழி நடத்தினாலும் அவர்களில் பலர் சூழ்நிலையின் தாக்கத்திற்கு உள்ளாகின்றார்கள். அவர்கள் எமது கட்டுப்பாட்டில் இருப்பதாக ஆசிரியர்களும் பெற்றாரும் நினைத்தாலும் குழந்தைகளின் மனம் அவ்வாறு இருப்பதில்லை. ஆக்க பூர்வச் சிந்தனைக்கு குழந்தைகளுக்கு ஓரளவு சுதந்திரமும் தேவைப்படுவதால் பிள்ளைகளின் சிந்தனைக் கோலங்களை அவதானித்து அவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டியது பெற்றாரிடமும் ஆசிரியர்களிடமும் காணப்பட வேண்டிய பிரதான கடமையாகும்.

குடும்பத்தில், பாடசாலையில் நிகழும் சிறு சிறு மகிழ்சியான செயற்பாடுகளின் கருத்தாடல்கள் பிள்ளைகளின் சிந்தனை விருத்திக்கு உறுதுணையாகி எதிர்காலத்தில் வளமான சிந்தனாவாதிகளை உருவாக்கும்.



- முற்றும் -




# கோழைத் தனத்தின் உச்சக்கட்டம்...!

- ம.நிரேஸ்குமார் -

***‘தற்கொலை’ இதுவே உலகில் கோழைத் தனத்தின் உச்சக்கட்டம். கோழைகளினால் மாத்திரமே இவ்வாறானதொரு முடிவை துணிச்சலாக எடுக்க முடியும்.***

மனித வாழ்க்கையின் எந்தவொரு பிரச்சினைக்கும் தற்கொலை தீர்வாகாது. தற்கொலை செய்ய நினைக்கும் ஒருவன் ஒரு விநாடி சிந்திப்பானாக இருந்தால் அவனால் நிச்சயமாக தற்கொலை செய்ய முடியாது. ஆனால் அந்த ஒரு விநாடி சிந்தனையை அவனது ‘கோழைத்தனம்’ தடுத்து விடுகின்றது. வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு நெருக்கடியை அல்லது நெருக்கடிகளை – அது மனம் சார்ந்த உள்ளார்ந்த நெருக்கடியாகவோ அல்லது புறத்தேயிருந்து தோன்றும் நெருக்கடியாகவோ இருக்கலாம் – எதிர் கொள்ளத் திராணியற்று கோழைகள் எடுக்கும் முடிவே தற்கொலை...!

ஒரு விநாடி சிந்திக்க மறுத்து, தவறான முடிவெடுக்கும் ஒருவன் இலகுவாக தன்னுயிரை மாய்த்துக் கொண்டு விடுவான். ஆனால் அவனுக்கு நெருக்கமான ஒவ்வொருவரும், அதன் பின்னர் தமது வாழ்நாள் முழுவதும் நடைப் பிணமாகவே வாழ்ந்து கொண்டிருப்பர். தன் சார்ந்த உறவுகளைத் தவிக்க விட்டு, மீள முடியாத சோகத்தில் ஆழ்த்தி, தவறான முடிவெடுக்கும் ஒவ்வொருவரும் ‘கொலைகாரர்’களுக்கு ஒப்பானவர்கள். கொலைகாரனாவது தான் செய்த கொலைக்கு தான் சார்ந்ததாக ஒரு காரணத்தை வைத்திருக்கக் கூடும். ஆனால் தற்கொலை செய்பவன் ஏனையவர்களை ஆறாத் துயரில் ஆழ்த்துவதற்குத் தன்னளவில் கூட ஒரு காரணத்தை வைத்திருக்க மாட்டான்.

அண்மைக் காலங்களில் ஒன்றிரண்டு பாடசாலை மாணவர்கள் தற்கொலை செய்து கொண்ட விடயம் பரவலாகப் பேசப் படுகின்றது. சிட்டுக் குருவிகளாகச் சிறகடித்துப் பறந்து, கல்வி கற்க வேண்டிய வயதில் இவ்வாறானதொரு தவறான முடிவை அவர்கள் எடுத்ததற்கான காரணங்களை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

அகம் சார்ந்து அல்லது புறம் சார்ந்து ஏற்பட்ட ஒரு சிறிய நெருக்கடியை எவ்வாறு எதிர்கொள்வது? அல்லது அந்நெருக்கடியை எவ்வாறு கையாள்வது? என்பது அவர்களுக்குத் தெரியாமையே அத்தவறான முடிவுக்கு காரணமாகும். இதில் ஆச்சரியமான விடயம் என்ன வென்றால், ஒரு உள நெருக்கடி ஏற்படுகின்ற போது அதனை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்,

தனது நம்பிக்கைக்குரியவரின் ஆலோசனையைப் பெற வேண்டும் என்கின்ற அடிப்படை அறிவு கூட இல்லாத மாணவ சமுதாயத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக் கின்றோம் என்பதாகும்.

இத்தற்கொலைகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய கடப்பாடு யாருக்குரியது?

பெற்றோர்...

ஆசிரியர்கள்...

நண்பர்கள்...

கல்விப் புலத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இது பற்றி ஆளமாகச் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

ஆசிரியர்கள் வெறுமனே கலைத்திட்டம் சார்ந்த கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடாமல், மாணவனது வாழ்க்கையில் ஏற்படக் கூடிய நெருக்கீடுகளை எதிர் கொள்ளும் மனப் பக்குவத்தை ஒவ்வொரு ஆசிரியரும் அவனது பாலர் கல்வியிலிருந்தே கற்றுக் கொடுக்க வேண்டும். அத்துடன் பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்ப ங்களில் ஏனைய-வர்களின் ஆலோசனைகளைப் பெற வேண்டும் என்கின்ற எண்ணத்தை அவன் சிந்தனைகளில் வசப்படுத்த வேண்டும்.

பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுடன், தங்களது பிள்ளைகளுக்காகவும் நேரம் செலவிட வேண்டும். தங்கள் பிள்ளைகளின் நண்பர்கள் யார்? யார்? என்பதைத் தெரிந்த கொள்ள வேண்டும்.

தொடரும்...

## எங்கள் மலையகம் (சிறுவர் பாடல்)

எங்கள் மலையகம் எங்கள் மலையகம்
என்றே நாமும் பாடுவோம்
எழுக மலையகம் எழுக மலையகம்
என்றே நாமும் கூடுவோம்

சாதிகள் இல்லை பேதங்கள் இல்லை
சரி நிகர் சமனாய் வாழுவோம்
ஆணென்றும் பெண்ணென்றும்
பிரிவுகள் இல்லை
அனைவரும் உயிர் என்று போற்றுவோம் (எங்கள் மலையகம்)

ஒழுக்கம் என்பது உயிராகும் - அந்த
பழக்கம் இருந்தால் நலமாகும்
உண்மை நேர்மை சத்தியம் இவையே
நன்மைகள் தருகின்ற செயலாகும் (எங்கள் மலையகம்)

கல்வியைக் கருத்துடன் கற்போம்
காலத்தை பொன்னெனப் போற்றுவோம்
சோம்பல் தூக்கம் ஆக்கத்தைக் கெடுக்கும்
கேடுகள் என்றே தூற்றுவோம் (எங்கள் மலையகம்)

உயர்ந்த மலை போல் வீரமும்
ஓடிடும் நதி போல் வேகமும்
அறிவும் ஆற்றலும் சேர்ந்திட வாழ்ந்தால்
அகிலம் போற்றிடும் நாளும் (எங்கள் மலையகம்)

சிவனு ராஜேந்திரன்

*நானும் கட்டாயம் வர வேண்டும் ஆனால் நான் கண்டிக்குப் போக வேணும் அங்கு எனக்கு முக்கிய வேலைகள் இருக்கு... அதனால் பெரிய மகன் தான் வருவான்... போயிட்டு வாங்க... புது கோலயா களு மகிந்த என்றவன் வருகிறான் கூட்டிக்கிட்டு போங்க..''*

அறிவார். சாராய விநியோகம், கள்ள ஓட்டு போடுதல், கலவரங்களை உண்டு பண்ணுதல், தீ வைத்தல் போன்றனவற்றில் எல்லாம் அவன் நன்கு பழக்கப்பட்டவன் என்பதை நேரடியாகவே கண்டுள்ளார். இவை பற்றி அவனிடம் பேசியதே இல்லை. உடனடியாக புறப்படுமாறு சைகை காட்டியவாறே அவன் வீட்டுக்குள் போவதற்கும், மூத்த மகன் சாலிய வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது. ''யமு யமு ...பறக்குவெனவா...'' (போவோம் ...நேரமாகி விட்டது) அவசரப்படுத்தினான். மங்களவினால் ஒன்றும் பேச முடியவில்லை. ஏதோ

# ட்ரைவர் மங்களவின் நெறியும் கொழும்பு மாளிகையின் வெறியும்

- சிவ.இராஜேந்திரன் -



2

''மஹமத்தியா...'' மூன்று நான்கு கேள்விகள் மங்களவிடம் இருந்தன. ''பேசிக் கொண்டிருக்க நேரமில்லை. ஒன்பது மணிக்கு கொழும்பில் இருக்க வேண்டும். உடனே புறப்படு...'' முதலாளி போனில் பேசிக் கொண்டே அங்குமிங்கும் நடந்தான். அவனது பட படப்பும் வேகமும் முக வெளிப்பாடும் 'நல்லதாக' தெரியவில்லை. எல்லாம் ரெடி, நான் பார்த்துக் கொள்கிறேன். வேன் கொண்டு வாரேன் ... என்று சத்தமாகவும் சில விடயங்களை இரகசியமாகவும் பேசுவது மங்களவுக்கு நன்றாகவே கேட்டது. தேர்தல் காலங்களில் விக்ரமநாயக்க நடந்து கொள்வதை மங்கள

கெட்டது நடக்கப் போகிறது என்பது மட்டும் உறுதியானது. வழமை போல் சாமி படங்களுக்கு முன்னால் பத்திகளைப் பற்ற வைத்து சிறிது நேரம் 'ஸ்டீரிங்கைப்' பிடித்தவாறே கண்ணை மூடி பிரார்த்தனை பண்ணினார். ''டக்காலா கண்ட... பறக்குவெனவா...'' மகன் சாலிய அவசரப்படுத் தினான். மங்களவின் கண்களில் நெருப்பு பறந்தது. ஒன்றும் பேசவில்லை. வேறு யாராவது இப்படி நடந்தருந்தால் செருப்பில் தான் அடித்திருப்பார். வாகனம் ஸ்டார்ட் செய்யும் போது கதைப்பது, எத்தனை மணிக்கு போய் சேரலாம் என கேட்பது எல்லாம் சிறந்த சாரதிகளுக்குப் பிடிக்காது என்பது பலருக்கும் தெரியும். வந்திருப்பது தனக்கு சம்பளம்



கொடுக்கும் முதலாளியின் மகன், இன்னொரு பச்சை இனவாதி. 'பார்' சொந்தக்காரன். வெள்ளை வேன் ஓட்டிச் செல்பவன். முறைத்து பார்த்தபடியே 'ஸ்டார்ட்' செய்தார். மூன்று முறை முயற்சித்த பின்னர் தான் 'ஸ்டார்ட்' ஆகியது. எப்போதும் தயாராக வைத்திருக்கும் 'பச்ச தண்ணியை' மூன்று மிடறு குடித்து விட்டு வாகனத்தை முன் பக்கமாக சற்று வேகமாக செலுத்தினார். என்றுமே இவ்வாறு செலுத்தியது இல்லை. மாமரச் சந்தியில் பத்து பதினைந்து பேர் ஏறினார்கள். பஸ்ஸின் பின் பக்கமுள்ள 'டிக்கியைத்' திறந்து யூரியா பேக்கில் கட்டப்பட்ட எதையோ ஏற்றினார்கள். இருவர் பெரிய பெட்டிகள் இரண்டை ஏற்றினார்கள். ட்ரைவர் எதையுமே கவனிக்காததைப் போல இருந்தார். இடையிடையே பலர் பஸ்ஸில் ஏறினர். அவர்களுள் நான்கு தமிழர்களும் மூன்று முஸ்லிம்களும் இருந்திருக்க வேண்டும் என்பதை அவரால் சரியாக ஊகிக்க முடிந்தது. பஸ்ஸினுள்ளே சாராயம் குடிப்பது மங்களவுக்குப் பிடிக்கவே பிடிக்காது. ஆனால் இன்று சாராய 'நாத்தம்' அவருக்கு தாங்க முடியாமல் இருந்தது. புது வகை சாராயமாக இருக்க வேண்டும். அந்த சாராய வாடை காற்றையும் மீறி பஸ்ஸினுள் பரவியது. மங்கள என்றுமே இவ்வாறான வேகத்தில் பஸ்ஸை செலுத்தியது இல்லை. "ஓ...ஓ ஹெமிங் யண்ட... இஸ்ஸரா நவத்தாண்ட தே பொமு.." (ஓ..ஓ மெல்ல போ... தேநீர் குடிக்க முன்னால் நிறுத்து) சாலிய கத்தினான். அவருக்கும் தேநீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது. திடீர் பிரேக்குடன் பஸ்ஸை நிறுத்தினார். ஆறு பேர் நிலை தடுமாறி விழுந்தனர். அவர்களுக்குள்ளேயே சமாதானமும் சொல்லிக் கொண்டனர். "ஏக்க தமாய் கியான்னே காணட்ட பொண்ட ஓனே...கியலா" (அளவோடு குடிக்க வேண்டும் என்ற சொல்வது அதற்காகத் தான்) பின் பக்கமாக இருந்து யாரோ ஒருவன் உளறினான். ஹோட்டலில் டீ குடிக்கும் போது, இவர்கள் அனைவரும் ஆளும் கட்சியின் கூட்டம் ஒன்றுக்குப் போகிறார்கள் என்பது விளங்கியது. "மாமே கிசியக்கட்ட பயவெண்ட எப்பா...அபி இன்னவா... ஹரித..." (மாமா ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் ..நாங்கள் இருக்கிறோம் சரியா.. ) சொன்னவன் நகரத்தில் 'குடு' ராஜா என்று அழைக்கப்படுகின்றவன் என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். பேசாமல் இருந்து விட்டார். வயசான வராக இருந்தாலும் நல்ல வேகமாக பஸ்ஸை ஓடுகிறார் என்று கூறி சிலர் முதுகில் பலமாகத் தட்டி பாராட்டினர். அவருக்கு கடுமையான கோபம் எனினும் ஒன்றும் பேச வில்லை. பஸ் புறப்பட்டது. சரியாக எட்டு மணி இருபது நிமிடத்துக்கு கொழும்பு கோட்டையை அடைந்தார்கள். சில வளைவுகளைக் கடந்த பின்னர் பஸ்ஸை நிறுத்தச் சொன்னார்கள். வேறு இடங்களில் இருந்தும் இவ்வாறு பஸ்கள் வந்துள்ளன என்பதை அறிய முடிந்தது.

தொடரும்..

# "இன்பா"வின் சிந்தனைத் தொடர் – 10

## கதைகளால் நியமாகி...



### உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்



ஒரு ஞானியிடம் ஒரு மனிதன் வந்து "என்னை இந்த கிராமமே முட்டாள் முட்டாளென்று சொல்கிறது நீங்கள் எப்படியாவது இதில் இருந்து என்னைக் காப்பாற்றுங்கள்" என்று சொன்னான்.

ஞானி கேட்டார் "கிராமம் முட்டாளென்று சொன்னால் அதற்கென்னப்பா அதைப் பற்றி கவலைப்படாதே." இவன் சொன்னான் "இல்லை இல்லை சாமி எல்லோரும் சொல்லிச் சொல்லி இப்போது நானும் நம்ப ஆரம்பித்து விட்டேன் எப்படியாவது என்னைக் காப்பாற்றுங்கள்."

ஞானி மிக அழகாக சொன்னார். "ஒரே வாரத்தில் இந்த கிராமமே உன்னை புத்திசாலி என்று சொல்ல ஆரம்பித்து விடும். நான் சொல்வதை மட்டும் செய்" என்றார்.

இந்த மனிதனுக்கு ஒரே ஆச்சரியம் "ஒரே வாரத்தில் மாற்றி விடுவீர்களா அப்படியென்றால் என்ன வேண்டு மென்றாலும் செய்கின்றேன் சொல்லுங்கள்".

அதற்கு அவர் சொன்னார் எதைப் பார்த்தாலும் விமர்சனம் செய். எதையுமே ஏற்றுக் கொள்ளாதே.

யாராவது ஒருவர் "என்ன அழகான ரோஜா என்று சொன்னால் இது என்ன பெரிய அழகா இதைச் சுற்றி எத்தனை முள் பார்த்தாயா?" என்று கேள்.

யாராவது ஒருவர் "என்ன ரோஜா இது? என்று சொன்னால் ஏன் முள்ளைப் பார்க்கிறாய் அதில் உள்ள அழகான பெரிய பூவைப் பார் என்று சொல்"

யாராவது ஒருவர் "என்ன அழகான நிலா" என்று சொன்னால் "என்ன பெரிய நிலா நடுவில் பார் கறுப்பு கறுப்பாக இருக்கிறது. எவ்வளவு களங்கம் என்று கூறு"

யாராவது ஒருவர் "அழகான வெள்ளை வேட்டி என்று சொன்னால் வெள்ளை என்ன பெரிய நிறமா? சிவப்பு எவ்வளவு அழகாக இருக்கும் இதென்ன பெரிய வெள்ளை? வேலையில்லாதவர் கட்டுகின்ற துணி" என்று தொடர்ந்து சொல்.

யாராவது ஒருவர் "நிறுவனத்தின் தலைவரை அமைதியானவர், ஜனனாயகப் பண்புள்ளவர் யாரையும் கண்டிப்பதும், தண்டிப்பதும் இல்லை. அன்பால் நிறுவன த்தை கட்டியாளுகிறார், ஊக்குவிக்கிறார்.அதனால் எல்லோரும் வினைத்திறனுடன் வேலை செய்கிறார்கள்". என்று சொன்னால், "கண்டிப்பும் தண்டிப்பும் சர்வதிகாரப் போக்கும் தான் எல்லோரிடமும் வேலை வாங்க செய்யும்

நிர்ப்பந்தமும், தண்டனையும் தான் நிறுவனத்திற்கு நல்ல பலனைத் தரும் என்று வாதிடு.

“தொடர்ந்து விமர்சனம் செய்யத் துவங்கு குற்றம் கண்டு பிடிப்பதையே வேலையாக செய். யார் என்ன சொன்னாலும் ஒரு வாரத்திற்கு விமர்சனம் செய்” என்று சொல்லிவிட்டு அந்த ஞானி அவருடைய யாத்திரையைத் தொடர்ந்தார்.

யாத்திரையை முடித்து ஒரு வாரம் கழித்து அந்த ஞானி வந்தார்.

ஒரு மரத்தின்கீழ் ஊர் பஞ்சாயத்து கூடுகிற இடத்தில் இந்த முட்டாளாக கருதப்பட்ட அந்த மனிதர் ஊர் சபையின் ஆசனத்தில் உட்காந்திருந்தார். சுற்றி அந்த ஊர் பெரியவர்கள் அமைதியாக நின்று கொண்டிருந்தார்கள்.



அவரை “முட்டாள் முட்டாள்” என்று சொல்லிக் கொண்டிருந்த அந்த ஊர்ப் பெரியவர்கள் எல்லாம் இவர் சொல்வதை மிகவும் மரியாதையாக அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஊர் பெரியவர்கள் எல்லாம் போன வுடன், இந்த முன்னாள் முட்டாள் நேராக வந்து இந்த ஞானியின் காலில் விழுந்தார்.

ஞானி கேட்டார் “என்னப்பா நடந்தது? எனக்கு ஒன்றும் புரியவில்லை என்றார். இதற்கு அவர் சொன்னார் “நீங்கள் சொன்னதைச் செய்தேன். எதைப் பார்த்தாலும் விமர்சித்துக் கொண்டிருந்தேன் அவ்வளவுதான் மக்கள் என்னைப் புத்திசாலி என ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்”

இரண்டே இரண்டு மனநிலைதான் உலகத்தில் உண்டு. ஒன்று என்ன நடந்தாலும் விமர்சிப்பது, மற்றொன்று என்ன நடந்தாலும் வரவேற்பது. தன் கடமையிலிருந்து தப்பிப் பதற்கும், தவறுவதற்காகவும் மற்றவர்களை விமர்சிக்கின் றார்கள், குற்றம் சொல்கின்றார்கள்.

என்ன நடந்தாலும் ஆனந்தப்படுபவர்கள், என்ன நடந்தாலும் ஏற்றுக் கொள்பவர்களைப் பார்த்தீர்கள் என்றால் அவர்கள் தனியாக இருப்பதில்லை. சேர்ந்தே இருக்கின்றார்கள். அவர்கள் சொர்க்கத்திற்கு போக வேண்டியதில்லை அவர்கள் இருக்கும் இடமே சொர்க்கம்தான்.

என்ன நடந்தாலும் விமர்சிக்கின்ற மன அமைப்பு உடையவர்கள் எங்குமே உலகத்தில் நிம்மதியாக வாழ முடியாது. விமர்சனம் செய்வது முட்டாள்களின் வேலை. விமர்சிப்பவர்கள் நரகத்தில் இருக்கின்றார்கள். அவர்களைச் சுற்றி இருப்பவர்களுக்கும் நரகம் தான். இப்படிப் பட்டவர்களைக் கண்டால் விலகி ஓடுங்கள். உங்களிடம் இத்தகைய குணம் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

**நீதி: விமர்சனம் செய்வதற்கு அறிவு தேவையில்லை.**

# ஆசிரியர்கள் மூன்று வகையினர்

1. முறைப்பாடு செய்பவர்கள் (Complain)
2. தெளிவுபடுத்துபவர் (Explain)
3. ஊக்குவிப்பவர் (Inspire)

## முறைப்பாடு செய்பவர்கள் (complain)

இவர்கள் எதிர் மனப்பாங்கைக் கொண்டவர்களாவர். அவர்கள் அனைத்தையும் பிழையான கண்ணோட்டத்தில் நோக்குவர். அனைவரையும் குறை சொல்வர். மாணவர்கள் பலவீனமானவர்கள், அதிபர் அடாத்தானவர். பாடத்திட்டம் பொருத்தமில்லை. அனைத்திலும் குறைபாடுள்ளது. இந்த ஆசிரியர்கள் முழு முறைமையையும் பாதிப்படையச் செய்கின்றனர். அவர்கள் தமக்கு மாத்திரமன்றி முழு பாடசாலைச் சமூகத்துக்கும் இழுக்கைக் கொண்டுவருகின்றனர்.

## விளக்கமளிப்பவர்கள் (Explain)

இவர்கள் சிறந்த தொடர்பாளர்கள். அவர்கள் அறிந்த அனைத்து விடயங்களையும் மிகவும் சிறப்பாக மாணவர் களுக்கு விளக்குவர். தலையிலிருந்து தலைக்கு தகவல் களைக் கடத்துவதில் வெற்றியடைகின்றனர். இந்த ஆசிரியர்களிடையே நேர்மனப்பாங்கைக் கொண்டவர்களும் எதிர்மனப்பாங்கைக் கொண்டவர்களும் அடங்குகின்றனர். கற்பித்தலில் எவ்வளவுதான் வெற்றிபெற்றாலும் எதிர் மனப்பாங்கு கொண்டவர்கள் ஆபத்தானவர்களே.

## ஊக்குவிப்பவர் (Inspire)


இவர்கள உணர்வு பூர்வமாக இதயத்திலிருந்து இதயத்து க்கு பேசக் கூடியவர்கள். மாணவர்களோடு திருப்தியாக மகிழ்ச்சியோடு கடமையாற்றுகின்றனர். மாணவர்கள் செல்ல வேண்டிய பாதையை காட்டிக் கொடுக்கும் தந்தை போன்றவர்கள். தாய் போன்றவர்கள். சில சந்தர்ப்பங்களில் தந்தையாக தாயாக சகோதரனாக மேலும் சில சந்தர்ப்பங்களில் நண்பனாக பாத்திரமேற்பர்.



நன்றி இணையம்

# படித்ததில் பிடித்தது...!

- ம.நிரேஸ்குமார் -




**"நவீன கல்விப் பிரயோகங்கள்"** என்னும் நூலானது யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வு நிலைப் பீடாதிபதி திரு.சதாசிவம் அமிர்தலிங்கம் அவர்கள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாகப் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் அவரால் எழுதப்பட்டு, ஷாம்பவி பதிப்பகம், யாழ்ப்பாணத்தில் அச்சுப் பதிப்பு செய்யப்பட்டு திருமதி.பாலசிலோன்மணி அமிர்தலிங்கம் அவர்களினால் 2015ம் ஆண்டு வெளியிடப்பட்டது.

அழகிய நேர்த்தியான அட்டைப்படம். பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், தலைவர், கணித புள்ளிவிபரத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களின் அணிந்துரை, நூலாசிரியரின் முன்னுரை என்பவற்றைத் தாங்கி சிறப்பான நூலாக வெளிவந்திருக்கின்றது.

நூலின் உள்ளே 16 கல்விசார் கட்டுரைகள், ஒவ்வொன்றும் கல்விப் பெருங் கடலில் கண்டெடுக்கப்பட்ட முத்துக்களாக ஜொலிக்கின்றன. ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தியில் அதிபரின் வகிபாகம், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் எதிர்காலம், செயற்பாடு சார்ந்த கற்றல் கற்பித்தலின் போது தர உள்ளீடுகளின் பயன்பாடு, அதிபரின் வேலைப் பழுவும் ஆசிரியரின் ஊக்குவிப்பும், ஆசிரியரும் விசேட உதவி தேவைப்படும் பிள்ளைகளும், கற்றலும் வழி நடத்தலும், பாடசாலையில் அதிபரின் வகிபங்கும் பங்களிப்பும், கணிதம் கற்றலும் "ஸ்கெம்" என்பவரின் கருத்துக்களும், ஆய்வும் ஆய்வை மேற்கொள்ளும் வழி முறைகளும், ஆசிரியர் கல்வியும் அதனை வழங்கும் நிறுவனங்களும், இலங்கையின் கல்விச் சட்டப் பிரயோகங்களில் 13வது திருத்தச் சட்டம், பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி, தமிழரின் வாழ்வுடன் கணிதம் ஒன்றிணைந்த விதம், ஆசிரியரது வகை கூறலின் முக்கியத்துவம், தேசிய கல்வியியற் கல்லூரிகளின் தேவைப்பாடும் க.பொ.த (உ/த), க.பொ.த (சா/த) மாணவர்களும் மற்றும் நேர முகாமைத்துவம் முதலான கட்டுரைகள் நூலில் இடம் பெற்றுள்ளன.

கல்வித் துறையில் பணியாற்றுகின்ற அல்லது கல்வியியல் சார்ந்த மேற்படிப்பை மேற்கொள்கின்ற எந்தவொருவருக்கும் இந்நூல் பயன்படக் கூடியது. கல்வித் துறையைச் சேர்ந்த அனைவரும் வாசிக்க வேண்டிய அருமையான ஒரு பொக்கிஷமாகவே இந்நூலினை நான் காண்கின்றேன்.

## உலகத்தின் தூக்கம் களையாதோ

ஊருக்கே உபதேசம்
தமக்கானதாய் இல்லை இங்கு

வேலிகளே இன்று :
பயிரை அதிகம் மேய்கின்றன!

நீதிகளை வரையறுத்து விட்டு:
அநீதிகளை அணிந்து கொள்கின்றது அதிகாரம்

நல்லவர் எனும் வெளித் தோற்றத்துள்ளே
ஒளிந்து கொள்கிறது நாசவேலை!

பொதுநலத்தை கூடாரம் செய்து :
தந்திரமாக பதுங்குகிறது சுயநலம்!

அன்பை போதிக்கும் கரங்களே
அதிகமாக வன்முறையை கட்டவிழ்க்கிறது!

போலி அன்பே – இன்று
அதிக முகங்களின் முகபூச்சு ஆனது!

அச்சு தாள்களுக்கே மதிப்பு அதிகம்
அதிகமாக நீதிகளும் விலை போகின்றது!

சத்தியவான்களும் சமத்துவ தேவர்களும் மானிட வாழ்வை போதித்த பூமி
மனித நேயம் மற்றவர்களின் காடானது

சமாதானத்தால் நிறைய வேண்டிய மானிட உலகம் – இன்று
சண்டைகள் மலிந்த சாக்கடை ஆனது

மாயைக்குள் உறங்கும் உலகம்
என்றுதான் விழித்துக் கொள்ளும்

- A.R.ஜெயதீபன் -

## தமிழ் மொழி

**மன்னவர்கள் காத்த மூத்த செம்மொழி**

**மாற்றாரும் பயின்று ஏற்ற தேன்மொழி**

**தித்திக்கும் புகழ் சேர்த்த பொன்மொழி**

**எத்திக்கும் வெற்றிகளை பார்த்த தலைமொழி**

**அகிலம் போற்றும் பெரும் ஆளுமைமொழி**

**இன்பம் பொழியும் அரும் ஈகைமொழி**

**உரிமை பேசும் நல் திருமொழி**

**ஊக்கம் தரும் பல் நயமொழி**

**கலைகள் நிலை கொள்கின்ற கருத்துள்ளமொழி**

**காதல்களும் தலை காவியமான அமுதஊற்றுமொழி**

**உயிர்களின் முதல்மொழியே உலகின் முதன்மைமொழியே**

**உன்வழியே வாழ்கின்றோம் எண்ணி உள்ளம் உருகுகின்றோம்...**

திரு. ரவிச்சந்திரன் நிரோஜன்
B.Sc. in MIT, MCSA
தொல்புரம் மத்தி,
சுழிபுரம், யாழ்ப்பாணம்

# தோழியே

என் தாயின் சகோதரியாக பிறந்து
நான் பிறந்த அன்று முதல் இன்று வரை
என் விருப்பங்களை நிறைவேற்றவென
தினமும் பாடுபடும் ஒரு உயிர்- இவள்

நான் சிரித்தாள் அவள் சிரிப்பாள்
நான் அழுதாள் அவள் அழுவாள்
நான் தோற்றால் அதை தன் தோல்வியாய் -எண்ணி
என் மூச்சின் கண்ணாடி போல் திகழ்பவள் -இவள்

இருபத்து மூன்று வருடங்களே எனக்காயினும்
என் தாயாக அவளும்-
அவள் சொக்க நானும் நடத்திடும் இவ்வுறவு
இனியும் தொடரவேண்டும் என்பதே எம் கனவு

என் சிறுசிறு குறும்பையும் அழகாய் இரசிப்பவள்
என் சிறுசிறு தவறையும் அன்றே மறப்பவள்
அவள் வயிற்றில் பிறந்த பிள்ளை அவளுடன் இருப்பினும்
அவள் பெயர் சொல்லும் மகளாக மாறுவதே - என் விருப்பு

கல்வியியற் கல்லூரியின் முதல்நாள் நுழைவின் போது
அனைவரும் பெற்றோரை பிரியமுடியாது அழுதவேளையில்
நானும் அழுதேன்! என் தோழியே! - உன்னை
பிரிய முடியாத மனநிலையை எண்ணி

என் தாயுடன் நான் கதைத்ததை விட
என் தோழியாக உன்னுடன்
என் வாழ்வின் பல தருணங்களையும்
செலவழித்த நேரங்களே -அதிகம்

தாயும் தந்தையும் என்மனையில் எனக்கிருக்க
என்றுமே எனக்கு தாயும் தந்தையுமாய்
தோழியும் உயிருமாய் என்றுமே எனக்காக
வாழுகின்ற ஒரு உயிர் - என் அம்மா

பாலகனின் பாலகி அவள்
தன்பிள்ளைக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விட
பல மடங்கை எனக்குமட்டும் தரும்
இளகியமனசுக்கு சொந்தக்காரி அவள்

தோழியே!!! நிச்சயமிட்டு கூறுகின்றேன்
உன் தாயாக நானும்
என் சேயாக நீயும் மாறும் காலத்தில் கூட
அன்புத் தோழியே!

**கோ.தனுசியா - விஞ்ஞானத்துறை -**

# அழகான வரமாக இருங்கள்!!

50 வயது மதிக்கத்தக்க ஒருவர் ஆழ்ந்த மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார், அவருடைய மனைவி ஒரு ஆலோசகரிடம் சந்திப்பை பதிவு செய்தார்.

மனைவி சொன்னாள்... “அவர் கடும் மன உளைச்சலில் இருக்கிறார், தயவு செய்து பாருங்கள்..”

மனைவி வெளியில் அமர்ந்திருந்தபோது ஆலோசகர் சில தனிப்பட்ட விஷயங்களைக் கேட்டு தனது ஆலோசனையைத் தொடங்கினார்.



கணவர் பேசினார், “நான் மிகவும் கவலைப்படுகிறேன். குடும்பப் பிரச்சனைகள், வேலை அழுத்தம், நண்பர்கள், குழந்தைகளின் படிப்பு, வேலை டென்ஷன், அடமானக் கடன், கார் கடன் போன்ற கவலைகளால் நான் மூழ்கிவிட்டேன். நான் விரும்பும் எல்லாவற்றிலும் நான் ஆர்வத்தை இழந்துவிட்டேன். உலகம் என்னை ஒரு பீரங்கியாக நினைக்கிறது, என்னிடம் எல்லாம் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள், ஆனால் என்னிடம் கார்ட்ரிட்ஜ் அளவுக்கு கூட பொருட்கள் இல்லை. நான் மிகவும் மன உளைச்சலில் இருக்கிறேன்..”

அப்போது கற்றறிந்த ஆலோசகர் அவரிடம், “நீங்கள் எந்த மேல்நிலைப் பள்ளியில் படித்தீர்கள்” என்று கேட்டார். அவர் பள்ளியின் பெயரைச் சொன்னார்.

அந்த ஆலோசகர், நீங்கள் அந்தப் பள்ளிக்குச் செல்லுமாறு நான் அறிவுறுத்த விரும்புகிறேன். நீங்கள் பள்ளிக்குச் சென்றதும், உங்கள் “வகுப்புப் பதிவேடு“ இருந்தால், உங்கள் சகாக்களின் பெயர்களைப் பார்த்து, அவர்களின் தற்போதைய நல்வாழ்வைப் பற்றிய தகவல்களைப் பெற முயற்சிக்கவும். அவர்களைப் பற்றி கிடைக்கும் அனைத்து தகவல் களையும் எழுதி ஒரு மாதம் கழித்து என்னை சந்திக்கவும்..!

ஜென்டில்மேன் தனது முன்னாள் பள்ளிக்குச் சென்று, பதிவேட்டைக் கண்டுபிடித்து, அதில் உள்ள ஒவ்வொரு பெயரையும் நகலெடுத்தார்.

மொத்தம் 120 பெயர்கள் இருந்தன. அவர் ஒரு மாதம் முழுவதும் இரவும் பகலும் முயன்றார், ஆனால் அவரது வகுப்பு தோழர்களில் 75-80 பேரின் தகவல்களை சேகரிக்க முடியவில்லை.

ஆச்சரியம்..!!!

இதில் 20 பேர் உயிரிழந்தனர்.

7 பேர் விதவைகள்,

13 பேர் விவாகரத்து பெற்றனர்.

10 பேர் போதைக்கு அடிமையானவர்கள்.

6 பேர் நம்பவே முடியாத அளவுக்கு பணக்காரனாக மாறியிருக்கிறார்கள்.

சிலர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், சிலர் முடங்கி, சிலர் நீரிழிவு, ஆஸ்துமா, இதய நோய் நோயாளிகள். அவர்களில் ஒரு ஜோடி கை/கால் அல்லது முதுகுத் தண்டு வடத்தில் காயங்களுடன் படுக்கையில் இருந்தனர். சிலருடைய பிள்ளைகள் பைத்தியம் பிடித்தவர்களாக, அலைக் கழிப்பவர்களாக மாறிவிட்டனர்.

ஒருவர் சிறையில் இருந்தார்.

இரண்டு விவாகரத்துக்குப் பிறகு ஒருவர் மூன்றாவது திருமணம் செய்ய முயல்கிறார்.

ஆலோசகர் கேட்டார்:- “இப்போது சொல்லுங்கள் உங்கள் மனச்சோர்வு எப்படி இருக்கிறது?”

அவருக்கு எந்த நோயும் இல்லை, அவர் பசியால் வாடவில்லை, அவரது மனம் சரியானது, அவர் துரதிர்ஷ்டவசமானவர் அல்ல என்பதை அந்த மனிதர் புரிந்து கொண்டார். அவருடைய மனைவியும் குழந்தைகளும் மிகவும் நல்லவர்களாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பது அவருக்கு அதிர்ஷ்டம். அவர் ஆரோக்கியமாகவும் இருந்தார், அவரால் தினமும் மூன்று வேளை உணவு வாங்க முடியும். அவரது சவால்கள் மற்றவர்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன.

உலகில் உண்மையில் நிறைய துக்கம் இருக்கிறது என்பதையும், தான் மிகவும் மகிழ்ச்சியாகவும் அதிர்ஷ்டசாலியாகவும் இருந்ததை அந்த மனிதர் உணர்ந்தார்.

மற்றவர்களின் தட்டுகளில் (மக்கள் அதிர்ஷ்டம் அல்லது துரதிர்ஷ்டம்) எட்டிப் பார்க்கும் பழக்கத்தை விட்டு விடுங்கள், உங்கள் தட்டில் உள்ள உணவை அன்புடன் எடுத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்க்கையை மற்றவர்களுடன் ஒப்பிடாதீர்கள். ஒவ்வொருவரும் அவரவர் விதியின்படி நகர்கிறார்கள், நீங்கள் தாமதமாகவோ அல்லது சீக்கிரமாகவோ இல்லை.

உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதை நீங்கள் நிராகரிப்பீர்கள்?

நல்லதோ, கெட்டதோ, பெரியதோ, சிறியதோ, எல்லாவற்றிலும் கொடுங்கள்.......

சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு எப்பொழுதும் நன்றி செலுத்துங்கள், ஒருபோதும் நன்றியில்லாதவர்களாக இருக்காதீர்கள்.

அழகான வரமாக இருங்கள்!!




உயிர் வாழக் கற்றுக்கொள் போதும். எவ்வாறு வாழ்வது என்பதை காலம் கற்றுத்தரும்.

நன்றி இணையம்

# சீனாவின் சிவன் - சக்தி

- ஞா.கயூரன் -





Yin and Yang

சிவனும் சக்தியும் இணைந்த அர்த்தநாரீஸ்வரர் உருவம் பல தத்துவங்களை எமக்குணர்த்தினாலும் அதில் ஒன்று இரவும் பகலும் அல்லது ஒளியும் இருளும் எனக் கூறுவர். இவ்வாறான தத்துவங்களை கொண்டமைந்ததே சீனா வின் "Yin and Yang" தத்துவமாகும்.

அருகில் உள்ள படத்தில் காணப்படும் வெள்ளையும் கறுப்பும் இணைந்த வட்ட வடிவ அமைப்பை பல்வேறு இடங்களில் பார்த்திருப்பீர்கள். ஆனால் பலரும் அதன் பொருளை அறிந்திருக்கமாட்டார்கள். இதனை சீனாவின் அர்த்தநாரீஸ்வரர் எனலாம். காரணம் மிகப் பெரும் வாழ்வியல் தத்துவத்தை கொண்டமைந்துள்ளமையாகும்.

"Yin and Yang" என்பது மரபுவழி சீனதத்துவத்தில் இரட்டைத் தத்துவத்தை விளக்கும் ஒரு கருத்து ஆகும். வாழ்வில் இரவும் பகலும், எதிரும் புதிரும், எதிர்மறையும் நேர்மறையும் எப்படி ஒன்றையொன்று இயற்கையிலேயே சார்ந்துள்ளது என்பதையும் எப்படி ஒன்றிலிருந்து மற்றொன்று துலங்கும் என்பதை விளக்கும் தத்துவம் இது. "Yin" என்பது மறை ஆற்றலையும் "Yang" என்பது நேர் ஆற்றலையும் குறிக்கின்றது

இதில் வெள்ளைப் பகுதி ஒளி, இன்பம், பெண், நேர் ஆற்றல் போன்றவற்றையும் கறுப்புப் பகுதி இருள், துன்பம், ஆண், மறை ஆற்றல் போன்வற்றையும் குறிப்பிடுகின்றது. இவை ஒன்றுக்கொன்று முரணான விடயங்களானாலும் இரண்டுமே எமது வாழ்வில் பின்னிப் பிணைந்தவை. இவ் "Yin and Yang" வட்டமானது சுத்திக்கொண்டே இருக்கும். எவ்வாறு இரவையும் பகலையும் நாம் தவிர்க்க முடியாதோ அதே போன்று நம் வாழ்வில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும்.


அதேபோன்று இன்பத்தில் துன்பமும், துன்பத்தில் இன்பமும் காணப்படுவதை வெள்ளைப் பகுதியில் உள்ள கறுப்பு வட்டமும் கறுப்புப் பகுதியில் உள்ள வெள்ளை வட்டமும் வெளிப்படுத்துகின்றது. அதேவேளை கறுப்புப் பகுதியும் வெள்ளைப் பகுதியும் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டிருப்பதை காணலாம்.

எதிரும் புதிரும் வேறாக இருந்தாலும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளது பகலின்றி இரவில்லை, ஒளியில்லாமல் இருளில்லை. அதுபோலவே இருளில்லாமல் ஒளியில்லை. இருளில்லாமல் ஒளியை அறியவும் முடியாது. இவைதான் "Yin and Yang" தத்துவத்தின் அடிப்படை.

எனவே வாழ்வில் துன்பத்தை அனுபவித்தாலே இன்பத்தின் பெறுமதியை உணரமுடியும்.

# பேசும் படங்கள்...!




நன்றி இணையம்